ந.க.482/2021/அ5
நாள்: 18.12.2021.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மயிலாடுதுறை.

## பத்திரிக்கைச் செய்தி

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 16 கிராம உதவியாளர் பணியிடங்கள் கீழ்கண்ட இனசுழற்சி முறையில் நிரப்பப்பட உள்ளது.

**காலிப்பணியிடங்களின் விவரம்** : பொதுப்போட்டி (GT) – **6** (பொது – **3**, பெண்-2, முன்னாள் இராணுவத்தினர் -1), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC & DNC)- **3** (பொது -3), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) (முஸ்லீம் தவிர) – **4** (பொது – 2, பெண்-1, முன்னாள் இராணுவத்தினர் -1), ஆதிதிராவிடர் (SC) – **2** (பொது -1, பெண்-1), ஆதிதிராவிடர் அருந்ததியினர் (SCA) – **1** (பொது).

மேற்காணும் பணியிடங்களுக்கு,

- கல்வித்தகுதி: 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- 01.07.2021 அன்றைய நிலையில் 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் (அருந்ததியினர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) ஆகியோருக்கு 37 வயதுக்குள், இதர வகுப்பினருக்கு 32 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தரங்கம்பாடி வட்டத்தினைச் சேர்ந்தவர்களாகவும், தரங்கம்பாடி வட்டத்திலேயே நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும்.

தகுதியும், விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிவரம், கல்வித்தகுதி சான்றுகள், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்பக பதிவு விபரம் ஆகியவற்றின் நகல்களுடன் விண்ணப்பதாரரின் சுய விலாசம் எழுதப்பட்ட ரூ.25/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட 25 x 10 செ.மீ அளவுள்ள உறை ஆகியவற்றுடன் விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 31.12.2021. மாலை 5.45 மணிக்குள் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைத்திட வேண்டும் எனவும் அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும், தமிழ்நாடு கிராம உதவியாளர் பணியமைப்பு விதிகளின்படி தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஒ-ம்/- இரா.லலிதா,
மாவட்ட ஆட்சியர்,
மயிலாடுதுறை.

/ஆணைப்படி/

மாவட்ட வருவாய் அலுவலர்.